ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2311/42 - 2022 දෙසැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.12.22

*2311/42 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1)(அ) ஆம் உப உறுப்புரையின் கீழ் என்னால் வெளியிடப்பட்டு 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289 /43 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டுள்ள அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 22 ஆம் திகதியிலிருந்து வலுவுக்கு வரும் வகையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**ரணில் விக்ரமசிங்க,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2022, திசெம்பர் மாதம் 21.

1A - G 38403 — 11 (2022/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

(1) இந்த அறிவித்தலின் "இல. 01 பாதுகாப்பு அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு :-

(அ) அதன் II வது நிரலின் 7ஆம் இலக்க விடயத்தை நீக்குவதன் மூலம்

(ஆ) அதன் II வது நிரலில் இல.8 தொடக்கம் 26 வரையிலான விடயங்களை முறையே இல. 7 தொடக்கம் இல.25 வரை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்

(2) அந்த அறிவித்தலின் "இல.04 பெண்கள் சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு :-

(அ) அதன் II வது நிரலில் 15 ஆம் இலக்க விடயத்தை நீக்குவதன் மூலம்

(3) அந்த அறிவித்தலில் "இல 07 பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு :-

(அ) அதன் II வது நிரலின் இல.15 வது விடயத்துக்கு பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்

**16. பல்துறை அபிவிருத்தி செயலாற்றுகை திணைக்களம்**

(4) அந்த அறிவித்தலின் "இல.09 கல்வி அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு.:-

(அ) அதன் II வது நிரலின் 34 வது விடயத்தை நீக்குவதன் மூலம்

(ஆ) அதன் II நிரலின் இல 35 தொடக்கம் 39 வரையிலான விடயங்களை முறையே 34 தொடக்கம் 38 வரை மீள இலக்கமிடுவதன் மூலம்

(5) அந்த அறிவித்தலின் "இல.12 சுகாதார அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு :-

(அ) அதில் II வது நிரலில் 27 வது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்

**28. சிறு நீரக நிதியம்**

(6) அந்த அறிவித்தலில் "இல 14 விவசாய அமைச்சர்" தலைப்புத் தொடர்பாக பின்வருமாறு. :-

(அ) அதில் I வது நிரலில் 39 ஆம் இலக்க விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்கவும்

**40. உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான சந்தை வசதிகளை விஸ்தரித்தல்**

(ஆ) அதில் I வது நிரலில் 40 மற்றும் 41 ஆவது விடயங்கள் முறையே 41 மற்றும் 42 ஆக மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்

(இ) அதில் II வது நிரலில் 16 ஆம் இலக்க விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்

**17. பிரதேச பொருளாதார நிலையங்கள்**

(7) அந்த அறிவித்தலில் "இல 19 கைத்தொழில் அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு :-

(அ) அதில் II வது நிரலில் 29 வது விடயத்துக்கு பின்னர் பின்வரும் விடயத்தை உள்ளடக்குவதன் மூலம்

**30. விதாதா நிலையம்**

(8) அந்த அறிவித்தலில் "இல 29 வர்த்தக வாணிப மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர்" தலைப்பு தொடர்பாக பின்வருமாறு. :-

(அ) அதில் I வது நிரலில் 07 ஆம் இலக்க விடயத்தை நீக்குவதன் மூலம்

(ஆ) அதில் I வது நிரலில் இல. 08 தொடக்கம் இல 18 வரையிலான விடயங்கள் முறையே இல. 7 தொடக்கம் 17 வரை மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்

(இ) அதில் II வது நிரலில் 6 ஆம் இலக்க விடயத்தை நீக்குவதன் மூலம்

(ஈ) அதில் II வது நிரலில் இல 7 தொடக்கம் இல. 14 வரையிலான விடயங்கள் முறையே இல. 6 தொடக்கம் 13 வரை மீண்டும் இலக்கமிடப்படுவதன் மூலம்

(உ) அதில் III வது நிரலில் தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவன (கூட்டிணைத்தல்) சட்டம் (2001 இல. 1) விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களை உள்ளடக்குவதன் மூலம்

- மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத்தீர்வைகள் சட்டம். (2018 ஆம் ஆண்டின் இல. 2 )
- முற்பாதுகாப்பு ஏற்பாடு சட்டம் (2018 ஆம் ஆண்டின் இல. 3)

EOG 12-0286

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.